**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 21.04.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 23** |
| Name | : | கோகுல் |
| Father's Name | : | சிற்றரசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 21.04.2026.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது இந்தியன் வங்கி, பாலக்கோடு கிளையில், உதவிமேலாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2025 ம் ஆண்டு ஜீன் மாதம் வரை பாப்பாரப்பட்டி இந்தியன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்தேன். நான் இந்தியன் வங்கி, பாப்பாரப்பட்டி கிளையில் உதவி மேலாளராக பணியிலிருந்தபோது CBCID போலிசார் PM KISSAN திட்டத்தின் கீழ் தகுதிபெறாத சில நபர்களுக்கு மேற்படி திட்டத்தில் பணம் வரவு வைக்கப்பட்டதாக திரு. திலகர் என்பவர் கேட்டார். அதன் பேரில் மேற்படி கிளையில் கணக்கு வைத்திருந்த மீனா, ராஜேஷ், செல்வி, அருண்குமார், குமரவேல் ஆகியோர்களது வங்கி பண பரிவர்த்தனை பட்டியல் கொடுத்தேன்.

2. **தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி கணக்கு எண். 6500659336 என்ற மீனா என்பவரது 01.04.2020 முதல் 07.09.2020 க்கான வங்கி பண பரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ. 21 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி கணக்கு எண். 613584114 என்ற ராஜேஷ். ஜெ.ஜெமினி என்பவரது 01.04.2020 முதல் 30.06.2020 மற்றும் 01.07.2020 முதல் 30.09.2020 மற்றும் 01.10.2020 முதல் 31.12.2020 க்கான வங்கி பண பரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.22 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி கணக்கு எண். 933685552 என்ற செல்வி என்பவரின் 01.04.2020 முதல் 30.06.2020 மற்றும் 01.07.2020 முதல் 30.09.2020 மற்றும் 01.10.2020 முதல் 31.12.2020 க்கான வங்கி பண பரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.23 ஆகும்.** இது சம்பந்தமாக போலிசா் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி பண பரிவர்த்தனை பட்டியலில் வரவு வைக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகை PM KISSAN திட்டத்தின் கீழ் வரவு வைக்கப்பட்ட தொகை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் PM KISSAN திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்களா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி நபர்கள் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்கள் என தெரியவரும்போது அந்த பணம் திரும்ப வங்கியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றால் சரிதான். நான் பணியிலிருந்தவரை அவ்வாறு கடிதம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 21.04.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 24** |
| Name | : | மெய்யழகன் |
| Father's Name | : | சாமிநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 21.04.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு கிராம வங்கி, நெருப்பூர் கிளையில், கிளை மேலாளராக பணிபுரிந்துவருகிறேன். நான் மேற்படி வங்கியில் மேலாளராக பணிபுரிந்தபோது PM KISSAN திட்டத்தின் கீழ் பயன்பெற்றதாக சொல்லப்படும் ரூத் என்பவரின் வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் கோரி CBCID போலிசார் விண்ணப்பித்திருந்தார்கள். அதன்பேரில் எங்களது கிளையில் ரூத் என்பவர் பராமரித்துவரும் வங்கி கணக்கு எண். 10024853968 என்ற கணக்கின் 02.04.2020 முதல் 09.11.2020 வரைக்கான வங்கிபண பரிவர்த்தனை பட்டியல் நான் வழங்கியதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி வங்கி கணக்கு எண். 10024853968 என்ற கணக்கின் 02.04.2020 முதல் 09.11.2020 வரைக்கான வங்கிபண பரிவர்த்தனை பட்டியல் ஏற்கனவே அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி பண பரிவர்த்தனை பட்டியலில் வரவு வைக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகை PM KISSAN திட்டத்தின் கீழ் வரவு வைக்கப்பட்ட தொகை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் PM KISSAN திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்களா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி நபர்கள் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்கள் என தெரியவரும்போது அந்த பணம் திரும்ப வங்கியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றால் சரிதான். நான் பணியிலிருந்தவரை அவ்வாறு கடிதம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**